சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை –ஆதிதிராவிடர் நலம் – 2011–2012–ம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தை மேம்படுத்த தேவையான கணினிகள் வாங்குதல் மற்றும் இணையதள வசதிகள் ஏற்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–1) துறை

அரசாணை (2ப) எண். 31

நாள்:24.10.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
ஐப்பசித்திங்கள் 7
படிக்கப்பட்டது:

ஆணை :

2011–2012–ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தை மேம்படுத்தத் தேவையான கணினிகள் வாங்கவும் மற்றும் இணையதள வசதிகள் ஏற்படுத்தவும் ரூ.55,00,000/– (ரூபாய் ஐம்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

2. மேலே பத்தி 1–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 001 – நெறிப்படுத்தலும், நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது AC – தலைமையிடப் பணியாளர்கள் – ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை – 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்
(கு.தொ.கு. 2225–01–001–AC – 1918)

3. மேலே பத்தி 1–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்றுச் செலவிட ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

4. தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதி 2000–ன்படி அல்லது மத்திய அரசின் நிறுவனமான "Director General of Supplies and Disposals"ன் ஒப்பந்த விலை (Rate contract)யின்படி இதில் எது அரசிற்கு இலாபகரமாக உள்ளதோ அங்கு கணினிகள் வாங்கவும் மற்றும் இணையதள வசதிகள் ஏற்படுத்தவும் ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

த.பி.பா.,

5. இவ்வாணை வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள் புதிய கணினிகள், வாங்கிய விவரம், விலை விவரம் ஆகியவை பற்றிய அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும் செலவினம் போக மீதத் தொகை இருப்பின் அத்தொகையை அரசு கணக்கில் உடனடியாக ஒப்படைப்பு செய்து அதன் விவரத்தை தெரிவிக்குமாறும் மற்றும் ஒப்பளிக்கப்பட்ட தொகை இத்திட்டப் பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் என ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.52742/ஆதி(ம)பந/2011 நாள்.12.10.2011–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
நகல்:
நிதி (ஆதி(ம)பந)த் துறை, / திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை–9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந8/அநமு 1) துறை, சென்னை–9
இ.கோ./ உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 24/10/11

24.10.11